3. தகவல் கோரல்

(அ) 22–1–1990 ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்பில் ஒரு சொற்றொடரை நீக்க வேண்டியது குறித்து.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நேற்று அவை நிறைவுறும்போது உணர்ச்சியின் அளவு சற்று அதிகமாகப் போய்விட்டது. நண்பர் திரு. சிங்காரம் அவர்கள் தேனீபோல ஓடியோடி சேகரித்த தகவல்களை எல்லாம் சொல்ல வேண்டுமென்ற ஆர்வத்தின் காரணத்தினாலே இங்கே அவரும் உணர்ச்சி வசப்பட்டு இருந்த நிலையிலே உங்களிடம் கொஞ்சம் அதிக நேரம் கேட்டுப் போராடினார். அவர்கள் அதே நிலையிலே வெகு நேரம் கேட்டுக்கொண்டு இருந்த காரணத்தினாலே, மாண்புமிகு திரு. சிங்காரம் அவர்களுடைய நடவடிக்கைகளைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லிவிட்டீர்கள். அது அவர்களுடைய பெருமைக்குப் பங்கம் விளைவிப்பதாக இருக்கிறது என்று அவரும் நாங்களும் கருதுகிறோம். எனவே தயவுசெய்து அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டால் எல்லோருக்கும் திருப்தியாக இருக்கும் என்ற கருத்தைச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களுடைய கருத்தை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன். அதற்கு முன்னால் நீங்கள் ஒரு உறுதியை அளிக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் அந்த உறுதியை நான் கேட்க வேண்டும்.

பொதுவாகவே இந்த அவையில் விவாதம் சுவையாக நடத்துவதற்காகப் பல குறுக்கீடுகளை நானும் அனுமதிக்கிறேன். நானும் அதிலே பங்கு பெறுகிறேன். இதுவரைக்கும் எந்த உறுப்பினருடைய கண்ணியத்திற்கும் குறைவான எந்தச் சொற்களையும் பயன்படுத்தியதாக நான் அறியவில்லை. எனினும் சில நேரங்களில் வரம்பு மீறிய சில செயல்களின் வாயிலாக, பேரவைத் தலைவரோ, வேறு எவருமோ, கண்ணியத்திற்குக் குறைவான சொற்களைப் பயன்படுத்தினால் கண்டிப்பாக அவை, அவைக் குறிப்புகளில் இருந்து நீக்கப்படுவதில் எந்தப் பின்னோட்டமும் கிடையாது. உறுதியாகவே அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவேன். ஆனால் அதற்கு முன்னால் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சிங்காரம், இன்னும் பொதுவாக எடுத்துக்கொண்டாலும் கூட, மேசையைத் தட்டுவது, தொடர்ந்து சத்தம் போட்டுக்கொண்டு இருப்பது இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகிறபோது முறைப்படிப் பார்த்தால் பேரவைத் தலைவர் அவருடைய சொல்லை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு முன்னால் அப்படிச் சொல்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவது என்றால் அவையிலே

யிருந்தே அவரை நீக்க வேண்டிய சூழ்நிலை இருக்கும் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. எனவே இப்போதும் நீங்கள் திரு. சிங்காரம் அவர்களுடைய செயலை நியாயப்படுத்துகிறீர்களா என்பதை முதலில் தெரிவித்துவிட்டால் பிறகு நான் அடுத்த நொடியில் இந்தச் சொற்றொடரைக் கண்டிப்பாக அவைக் குறிப்பிலிருந்து நீக்குவேன். இன்றைக்கு நீங்கள் சொல்கின்ற இந்தப் பகுதி எல்லோருக்கும் பொருந்தும் என்பதற்காகச் சொல்கிறேன்.

காரணம் இன்று 23 பேச்சாளர்கள் பெயர் கொடுத்திருக்கின்றார்கள். இன்றைக்கு ஒரு மணிக்கு அவை முடியப் போகிறது. மீண்டும் 4 மணிக்குக் கூடப் போகிறது. முன் வரிசையில் உள்ள தலைவர்கள் பேசப் போகிறார்கள். நாளைக்கு காங்கிரஸ் கட்சியினுடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், அதற்குப் பிறகு முதல்வர் அவர்களுடைய பதில் உரையும் இருக்கிறது. இந்த வரிசையில் அமைத்துக் கொண்டால்தான் எல்லோருக்கும் இந்த அவையில் பேசுவதற்குக் வாய்ப்புக் கிடைக்கும். ஒவ்வொரு நாளும் சில பெயர்கள் குறிக்கப்பட்டு, பின்னால் தள்ளப்பட்டு அவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் நழுவிக் கொண்டே போகிற அளவிற்கு இருக்கிறது. நேற்று 147 மணித் துளிகளை 8 பேர்கள் மட்டுமே பகிர்ந்து கொண்டு இருக்கின்றார்கள். இந்த நிலை தொடருமானால், இன்றைக்குப் பெயர் கொடுத்திருக்கின்ற 23 பேர்களில் 8 பேர்களைத் தவிர கண்டிப்பாக மற்றவர்களுக்கு வாய்ப்பு இருக்காது. இது போன்ற சூழ்நிலைகளில் தொடர்ந்து, இங்கே மணி அடிப்பது என்பது ஏதோ ஒரு பொழுதுபோக்காக அடிப்பது என்பதல்ல. 8 மணித்துளிகளுக்கு பிறகு ஒரு முறை ஒரு மணியடித்தால் முடிக்க வேண்டும் என்ற உணர்ச்சியை அது தோற்றுவிக்கவேண்டும். அதற்குப் பிறகு 10-வது மணித் துளி இருக்கும்போது முடித்து விடுகிறோம் என்று சொல்லி முடிப்பதற்கான வாக்கியங்களைத் தொடர வேண்டும். அதை எப்படி முடிக்க வேண்டும் என்பது நம்முடைய இலக்கியச் செல்வர் அவர்களுக்குத் தெரியும். அப்படி முயற்சியே செய்யாமல் மேலும் 2 நிமிடம், மேலும் 2 நிமிடம் என்றால், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே கூட எழுதினார்கள், 'even after giving 2 or 3 extensions' என்று. இவ்வளவு நீட்டிப்புக் கொடுத்த பிறகும் நான் உட்கார மாட்டேன் என்று உறுப்பினர் சொல்வதும், மேசையைத் தட்டுவதும், சத்தம் போடுவதும் எந்த அளவுக்குப் பொருந்தும் என்பதை அருள்கூர்ந்து நம் குமரி அனந்தன் அவர்கள் தான் சொல்ல வேண்டும். இது தொடர்ந்து நீடிக்கலாமா அல்லது எல்லா உறுப்பினர்களும் ஒட்டு மொத்தமாக இனிமேல் அப்படி நடக்காது என்று தெரிவிக்கும் வகையிலே அனைவரின் சார்பிலும் நீங்கள் உறுதி அளிப்பீர்களானால் அடுத்த நொடியில் நான் என்னுடைய செய்தியைச் சொல்லி விடுவேன்.

1990 சனவரி 23]

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நடைபெற்ற சம்பவங்கள் என்று சொல்வது அந்த நேரம் சரியாக அமையாத காரணத்தாலே ஏற்பட்ட நிலை, நீங்கள் ஒரு மணியிலிருந்து பசிக்க ஆரம்பிக்கிறது என்று ஆரம்பித்ததாலே பசிக்காத எனக்குக் கூட பசிக்க ஆரம்பித்து விட்டது. அதிலும் அடிக்கடி மீன் ....

10-25 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் பயன் படுத்தவில்லை. அவரே சொன்னார், நம்முடைய அமைச்சர் நன்றாக சாப்பிடுவார் என்று சொன்னார். நான்தான் சாப் பாட்டை ஏன் இந்த நேரத்திலே நினைவூட்டுகிறீர்கள் என்று சொன்னேன். மீண்டும் அவைக் குறிப்பை எடுத்துப் படித்துப் பாருங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, அந்தச் சூழ்நிலையில் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு குறுக்கீடு. நான் இதே அவையில் 7 மணி 20 மணித் துளிகள் தொடர்ந்து இருந் திருக்கிறேன். எனவே, நான் பசி பற்றிக் கவலைப்பட வில்லை.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, அந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு உறுப் பினருக்கு தாங்கள் வாய்ப்பு அளித்தீர்கள் என்பதை நிச்சய மாக யாரும் மறுக்க முடியாது. அந்த வாய்ப்பை அவர் சற்று அதிகமாகப் பயன்படுத்தி பேசி விட்டார். காரணம் அப் போது குறுக்கீடுகள் அதிகமாக ஏற்பட்டு விட்டன. எப்போதும் வாடிக்கையாக அப்படி நடந்துகொள்ளாதவர் என்கிற பெயரை எடுத்தவர் அந்த உறுப்பினர். ஆகவே, நேற்று இங்கே நடந்த முறை தவிர்க்க வேண்டிய ஒன்று. எனவே, அதை மறந்து அவைத் தலைவரே பேசிய வார்த்தையாக இருந்தாலும் அதை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கி நல்ல தொரு சூழ்நிலை ஏற்பட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவருடைய இந்த அன்பான வேண்டுகோளையும், காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் வைத்த அந்த கோரிக்கையையும் முழுவதுமாக ஏற்று அவைத் தலைவர் நேற்று பயன்படுத்திய ஒரு சொல்லை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குவதோடு இனிமேல் எல்லா உறுப்பினர் களும் மிகுந்த கண்ணியத்தோடு இந்த அவைக்கும் பேரவைத்

தலைவருடைய மணிக்கும் உரிய வாய்ப்புகளையும், மதிப்பையும் கொடுத்து நடந்துகொண்டு தொடர்ந்து கண்ணியத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து திரு. பி. எச். பாண்டியன். [redacted]

(ஆ) சென்னை உயர்நீதி மன்றத்தில் காலியாகவுள்ள நீதிபதிகள் பதவிகளை நிரப்புவது தொடர்பாக அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர் நீதிமன்றத்தில் காலியாக இருக்கக்கூடிய நீதிபதிகள் பதவிகளை நிரப்புவதற்குத் தமிழக அரசிடமிருந்து மத்திய அரசாங்கத்திற்குப் பெயர்களை அனுப்பிவிட்டார்களா? அப்படி அனுப்பிவிட்டார்களானால் யார், யார் பெயர்களை அனுப்பியிருக்கிறார்கள் என்பதைப் பற்றி இந்த அவை தெரிந்து கொள்ள வேண்டாமா? இன்றைக்கு வந்திருக்கிற அரசு freedom of information அதாவது மக்களுக்கு எல்லாம் தெரிய வேண்டும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இதுபோன்ற நியமனங்களை இந்த அவைக்கும், நாட்டு மக்களுக்கும் தெரியாமல், வழக்கறிஞர்களுக்கும் தெரியாமல், வழக்கறிஞர் சங்கத்திற்கும் தெரியாமல் பெயர்களை அனுப்பினால், அவர்கள் பதவி ஏற்ற பிறகு அவர்களைப் பற்றி யாரும் பேசவும் முடியாது, வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கவும் முடியாது. அந்தக் காரணத்தால் தான் இதனை நான் சொல்கிறேன். மேலும் இந்தப் புதிய முறையை இன்றையதினம் பல மேலை நாடுகளில் பின்பற்றுகிறார்கள் என்பதையும் நான் மாண்புமிகு முதலமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அமெரிக்கத் திருநாட்டில் இவ்வாறு நியமிப்பதற்கு முன் வழக்கறிஞர் சங்கங்களைக் கேட்கிறார்கள். அதுபோல யார் யாரை நீதிபதிகளாக நியமிக்க வேண்டுமென்று அமெரிக்கப் பாராளுமன்றத்தில் பாஸ் செய்த பிறகு தான் நியமனம் செய்கிறார்கள். தமிழ்நாட்டில் கூட ராஜமன்னார் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் மாநில அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்க அதிகாரம் இருக்கிறது என்று கூறியிருக்கிறது. ஆகவே, யார் யாருடைய பெயரை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க முடியாவிட்டாலும் கூட எத்தனை பேர்களுடைய பெயர்களை அனுப்பியிருக்கிறார்கள் என்பதையாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை பெயர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் யார், யாருடைய பெயர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன என்